தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

புதன்கிழமை, 1978 ஏப்ரல் 26

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தற்காலிகத் தலைவர் (திரு. கே. எஸ். அப்துல் வகாப்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. சட்ட மன்ற மேலவைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு தற்காலிகத் தலைவர் (திரு. கே. எஸ். அப்துல் வகாப்): மாண்புமிகு உறுப்பினர்களே, மேலவையின் இன்றைய அலுவல் இந்திய அரசியலமைப்பின் 182-வது பிரிவின்படி மேலவைத் தலைவர் அவர்களைத் தேர்ந்தெடுப்பதாகும். அப் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளரின் வேட்புத்தாள் செயலரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலவை விதி 4, துணை விதி (4)ன்படி தலைவர் பதவிக்கு முறைப்படி மொழியப்பட்டுள்ள வேட்பாளரின் பெயரையும், அவரை முன்மொழிந்தவர் பெயரையும் வழிமொழிந்தவர் பெயரையும், இவ்வவையில் படிக்க வேண்டும். அதன் விவரம் வருமாறு :—

வேட்பாளரின் பெயர் : திரு. ம. பொ. சிவஞானம்.

முன்மொழிந்தவர் : திரு. கே. இராஜா முகமது.

வழிமொழிந்தவர் : திரு. இராம. வீரப்பன்.

ஆக, ஒரே ஒரு வேட்பாளர் பெயர் மட்டுமே மேலவைத் தலைவர் பதவிக்கு மொழியப்பட்டிருப்பதால், நான் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் இம்மேலவையின் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். (உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரம்.)

இத்துடன் எனது அலுவல் முடிவடைகிறது. இப்பொழுது மேலவைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களுக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னைப் பெறுத்தவரையில், நான் ஒரு கட்சியைச் சார்ந்தவன் என்ற முறையில் முஸ்லீம் லீக் கட்சியினுடைய பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் நான் சிலம்புச் செல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் இன்றைக்குச் சிறப்புப் பெற்றிருக்கிறார்கள், பெருமை பெற்றிருக்கிறார்கள் என்றால், அது தமிழுக்குக்

கிடைத்த பெருமை. அவர் தமிழ்ப் பெரியார். தமிழ்த் தாய் என்று ஒன்று இருக்குமானால் அந்தத் தாய் இந்தக் காட்சியைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடிப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.

அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் படித்தேன். ஏழைக் குடும்பத்தில் பிறந்து சிறு பிராயத்தில் நெசவாளராக வேலை செய்து, அச்சுத் தொழிலாளியாக இருந்து, இன்றைக்கு மேலவைத் தலைவராக வந்திருக்கிறார்கள் என்றால், அவர் உழைப்பால் உயர்ந்த உத்தமர் என்று சொல்வேன். அவரை நினைக்கும் போது, எனக்குத் தலைவர் காமராஜர் நினைவுக்கு வருகிறார், அவரும் குறைவாகப் படித்த நிலையில் உழைப்பால் உயர்ந்து முதலமைச்சர் நிலைக்கு வந்து பெருமைப்பட்டவர்கள். அத்தகைய நல்ல நிலைக்கு வந்துள்ள தலைவர் அவர்களைப் பாராட்டுகிறேன். சிலம்புச் செல்வர் அவர்கள் எத்தகைய பேச்சாளர் என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. இன்றைக்கு வாழ்கிற தமிழில் பேசக்கூடிய தலைசிறந்த பேச்சாளர்களில், நான்கைந்து பேர்களில் அவர் தலை சிறந்தவர் என்று சொன்னால், மிகையாகாது. அவர் பேசும்போது, பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவு வரும். அண்ணா பாணியில் பேசும் ஆற்றலும் திறமையும் சிலம்புச் செல்வருக்கு உண்டு என்று சொன்னால், அதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று திடமாக நம்புகிறேன், வானத்தில் நட்சத்திரங்கள் நிறைந்திருக்கின்றன. ஒரே ஒரு சந்திரன் இருக்கிறது. அதைப்போல சிலம்புச் செல்வர் அவர்கள் பல சிறப்புக்களைப் பெற்றிருந்தாலும், இன்றைக்குப் பெற்றிருக்கும் சிறப்பு வானத்தில் உள்ள சந்திரனைப் போன்றது, உச்ச கட்டத்திலுள்ள சிறப்பு என்று சொல்லி நான் பாராட்டுகிறேன்.

நம்முடைய எதிர்கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சார்ந்த கட்சியும் இந்தத் தேர்தல் ஏகமனதாக நடக்கவேண்டுமென்று நடந்துகொண்ட பெருந்தன்மைக்காக நான் பாராட்டுகிறேன். தலைவர் அவர்கள் இந்த ஸ்தானத்தில் உட்கார்ந்துவிட்டால், கட்சி சார்பற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்பது மரபு. ஒரு பெரியார் இதற்கு உதாரணமாகச் சொல்லியது என் நினைவுக்கு வருகிறது. கோவிலுக்கு, பள்ளிவாசலுக்குச் செருப்பு போட்டுக்கொண்டு சென்றால், அதை வெளியே போட்டுவிட்டு உள்ளே செல்கிறோம். மறுபடியும் வெளியே வரும்போது, செருப்பை மாட்டிக் கொண்டு வருகிறோம். அதைப்போல இந்த ஸ்தானத்தில் இருப்பவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அந்தக் கட்சியை விட்டுவிட்டு வந்து அமர வேண்டும். வெளியே போகும்போது, அவர்கள் கட்சியில் இருந்து கொள்ளலாம். மற்றொன்று நான் சொல்ல விரும்புவது, எல்லா உறுப்பினர் களையும் சமமாக நினைக்கவேண்டும். இதைச் சொல்லும்போது முன்பு இங்கே தலைவராக இருந்த பெரியவர் மகாராஷ்டிராவில் கவர்னராக இருந்த டாக்டர் பி. வி. செரியன் அவர்கள்

1978 ஏப்ரல் 26] [மாண்புமிகு தற்காலிகத் தலைவர்]

சொன்னது நினைவுக்கு வருகிறது. இந்தச் சபையில் பெருமிதத்துடன் ஒன்றைச் சொல்கிறேன் என்று சொல்லி, '' இங்கே 63 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இந்த 63 பேரில் ஒவ்வொருவரும் எனக்கு ஆப்த நண்பர்கள். எவரிடமும் பாகுபாடு இல்லை, பாரபட்சம் இல்லை'', என்று சொன்னார். அதைப் போல நம்முடைய தலைவர் அவர்கள் எல்லா உறுப்பினர்களையும் ஆப்த நண்பர்களாக மதித்துப் பழகி யாரிடமும் பாரபட்சம் இல்லாமல் நடப்பதற்கு வழிகாட்டியாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு, நீண்ட நாட்களுக்கு எல்லாம்வல்ல இறைவன் அவர்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்தித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

இப்போது மேலவைத் தலைவர் அவர்களை அவை முன்னவரும் எதிர்க் கட்சித் தலைவரும் அழைத்து வந்து அவரது இருக்கையில் அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைவர் அவர்கள் தம் இருக்கைக்குச் சென்று அமரும் வரை உறுப்பினர் அனைவரும் எழுந்து நிற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

(பிறகு அவை முன்னவரும் எதிர்க் கட்சித் தலைவரும் அவைத் தலைவரை அவரது இருக்கைக்கு அழைத்து வந்தனர்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களே, இந்த மேலவையின் தலைவராக என்னை ஒருமனதுடன் தேர்ந்தெடுத்தமைக்காக கைகூப்பி வணங்கி என்னுடைய நன்றியறிதலை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எனது முதல் அலுவல் துணைத் தலைவர் அவர்கள் தேர்தலை நடத்தி வைப்பதாகும். அது முடிந்தவுடன் பாராட்டுரை வழங்கப்படும்.

மேலவைத் துணைத் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளரின் வேட்புத்தாள் ஏற்கனவே செயலாளரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலவை விதி 5, துணை விதி (4)-ன் படி, துணைத் தலைவர் பதவிக்கு முறைப்படி மொழியப்பட்டுள்ள வேட்பாளரின் பெயரையும், அவரை முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களையும் இவ்வவையில் நான் படிக்க வேண்டும். அதன் விவரம் வருமாறு:—

வேட்பாளரின் பெயர் : திரு. ஜி. சுவாமிநாதன்.

முன்மொழிந்தவர் : திரு. ஏ. ஆர். தாமோதரன்.

வழிமொழிந்தவர் : திரு. டி. வி. டிமாண்டி.